# இராமேஸ்வரம் நகர் மன்ற கூட்டம்

## 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ம் தேதி காலை 11 : 00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்றக்கூட்ட நடவடிக்கை

---

## முன்னிலை : அ. வீரமுத்துகுமார் B.Tech., தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், இராமேஸ்வரம் நகராட்சி

**பொருள் எண் 01** :

இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 21 முடிய உள்ள பகுதிகளில் தூய்மை இந்தியா(SBM) திட்டம் தொடர்பான திறந்தவெளி கழிப்பிடங்களற்ற பகுதியாக அறிவிக்கவும். அதனை பொதுமக்களுக்கு தெரியப்படுத்திட செய்திதாள் மற்றும் மக்கள் கூடும் இடங்களில் விளம்பரம் மூலம் தெரியப்படுத்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : இராமேஸ்வரம் நகராட்சியினை திறந்தவெளி கழிப்பிடங்களற்ற பகுதியாக அறிவித்தும் பொதுமக்களுக்கு விளம்பரப்படுத்தவும் மன்றம் அணுகவும்.

**தீர்மான எண்** : **66**

**தீர்மானம்** : **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.02** :

இராமேஸ்வரம் நகராட்சி பகுதியில் வசிக்கும் அனைத்து மக்களும் 100 விழுக்காடு கழிப்பறைகள் மட்டுமே பயன்படுத்தி வருகின்றனர் என்றும் திறந்த வெளியினை கழிப்பிடமாக பயன்படுத்துவது இல்லை எனவும், இதற்காக நகரில் தனிநபர் கழிப்பறை கட்ட வசதியில்லாத குடும்பங்களை கண்டறிந்து குடும்பங்களுக்கு தனிநபர் கழிப்பிடம் கட்டிகொடுக்கப்பட்டுள்ளது. எனவே நகர் பொதுமக்கள் தங்கள் வீடுகளில் உள்ள கழிப்பறைகள் மற்றும் பொதுகழிப்பிடங்களையே பயன்படுத்தி வருகிறார்கள். இதனை இராமேஸ்வரம் நகராட்சியில் வார்டு வாரியான விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப் பெற்று உறுதிமொழி அளித்துள்ளார். மேலும் இதற்கான அனைத்து பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் , ஆசிரியர்கள் மற்றும் பள்ளியில் உள்ள பணியாளர்கள் தங்கள் பள்ளிகளிலும் வீடுகளிலும் கழிப்பறை தான் பயன்படுத்தி வருகின்றோம் என உறுதிமொழி செய்து உரியபடிவத்தில் கையெழுத்து

இட்டு கொடுத்துள்ளார்கள். இந்நகரில் இயங்கும் சுயநிதி உதவிக்குழு உறுப்பினர்கள் தங்கள் பகுதிகளில் உள்ள வீடுகளில் வீட்டு கழிப்பறை, அல்லது சமுதாய கழிப்பறை, பொதுகழிப்பறைகளை பயன்படுத்தி வருகின்றோம். என உறுதிமொழி அளித்துள்ளனர். தினசரி பத்திரிக்கையில் இராமேஸ்வரம் நகராட்சி பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் கழிப்பறைகளை தான் பயன்படுத்தி வருகின்றனர். திறந்தவெளியில் மலம் கழிப்பது இல்லை என அறிவிப்பு வெளியிடப்படவுள்ளது. ஆட்சேபனை ஏதுமிருப்பின் 15 தினஙகளுக்குள் நகராட்சி ஆணையர், அவர்களிடம் நேரிலோ அல்லது மின்னஞ்சல் முகவரிக்கோ தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆட்சேபனை ஏதும் பெறப்படவில்லை. எனவே இராமேஸ்வரம் நகராட்சி பகுதியில் 100 விழுக்காடு திறந்தவெளி கழிப்பிடமில்லா பகுதியாக அறிவிப்பு செய்யவும், அதற்கான பிரரேரனையை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** : மன்றம் அனுமதிக்கலாம்
**தீர்மான எண்** : **67**
**தீர்மானம்** : **அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்.03</u>** :

இந்நகராட்சியினை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளி கழிப்பிட மற்ற நகராட்சியாக அறிவிக்கும் பொருட்டு, தூய்மை இந்தியா திட்ட வழிகாட்டுதலின்படி, நகர்பகுதியிலுள்ள குடியிருப்புகளில் கழிப்பிடமற்ற குடியிருப்புகள் கண்டறிந்து அவற்றில் இடவசதியுள்ள குடியிருப்புகளுக்கு திட்டமான்யத்துடன் கழிப்பிடம் அமைத்தும், கழிப்பிடமற்ற இதர குடியுருப்புதாரர்கள் வணிக நிறுவனப் பகுதிகளில் உள்ளோர் மற்றும் நகருக்குள் வந்துசெல்லும் பொதுமக்கள் பயன்படுத்த தேவையான பொதுக்கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டு அனைவருக்கும் கழிப்பிடவசதி செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் கழிப்பறையை பயன்படுத்துமாறும், மீறி திறந்தவெளியை கழிப்பிடமாக பயன்படுத்தினால் தண்டத்தொகை வசூலிக்கப்படும் எனவும் நகர்மன்றதீர்மான எண் 62 நாள் 27.09.2017 இல் முன்மொழிவு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தீர்மானத்தின் அடிப்படையில் பொதுமக்களிடம் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் கோரி பொதுமக்கள் கூடும் முக்கிய இடங்களில்

அறிவிப்பு பதாகைகள் வைத்து விளம்பரம் செய்யப்பட்டதுடன் 23.09.2017 ஆம் தேதியன்று தினசரி நாளிதழில் அறிவிப்பும் செய்யப்பட்டது. மேற்காணும் விளம்பரத்தின் அடிப்படையில் 15 தினங்களுக்கு மேலாகியும் நாளது வரை பொதுமக்களிடம் இருந்து ஆட்சேபனைகளோ, ஆலோசனைகளோ பெறப்படவில்லை.

மேலும் தூய்மை இந்தியா திட்ட வழிகாட்டுதலின்படி திறந்தவெளியை கழிப்பிடமாக பயன்படுத்தமாட்டோம் எனவும் மலஜல கழிக்க கழிப்பறையை மட்டுமே பயன்படுத்துவோம் எனவும், இராமேஸ்வரம் நகராட்சிபகுதியிலுள்ள 32 பள்ளிகளில்பயிலும் மாணவ/மாணவிகள் மற்றும் ஆசிரியர்களிடம் உறுதிமொழிபெறப்பட்டுள்ளது.

நகர் பகுதியிலுள்ள 3 மகளிர் சுயஉதவிக் குழுக்களிடம் திறந்த வெளியில் மலம் கழிப்பதில்லையென உறுதிமொழி பெறப்பட்டுள்ளது.

தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றம் இல்லாத காரணத்தினால் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு பதிலாக நகர் பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி பணியாளர்கள். பள்ளிஆசிரியர்கள் மற்றும் வருவாய் உதவியாளர்களிடமும் இந்நகரின் அனைத்து வார்டு பகுதிகளிலும் திறந்த வெளிகழிப்பிடம் இல்லையென உறுதிமொழி பெறப்பட்டுள்ளது.

மேற்காணும் நடவடிக்கைகளின் அடிப்படையில் நகராட்சியினை திறந்தவெளி கழிப்பிடமற் றநகராட்சியாக உறுதிசெய்து இறுதி அறிவிப்பு வெளியிட விதிகளின்படி மேல்நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** : தூய்மை இந்தியா திட்ட வழிகாட்டுதலின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத நிலை உருவாக்கப்பட்டு விட்டதால் நகராட்சியினை திறந்தவெளி கழிப்பிடமற்ற நகராட்சியாக இறுதி அறிவிப்பு செய்ய விதிகளின்படி மேல்நடவடிக்கை தொடர மன்ற அனுமதிவழங்கலாம்.

**தீர்மான எண்** : **68**

**தீர்மானம்** : **அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்.04</u>** :

இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17, மேலத்தெருவில் அமைந்துள்ள குருநாக் தாம் கட்டிடம் வரிவிதிப்பு எண் 10854 வழிபாட்டுதலமாக அமைவதால், வரிவிலக்கு அளிக்கக்கோரி மனுவரப்பெற்றுள்ளதை, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னைஅவர்களின் ந.க.எண்.25240/2012/ஆர்4 நாள்: 02–07–2017 கடிதத்தின் வாயிலாகவும் மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரியிலிருந்து, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(அ)ன் படி பொதுமக்கள் மற்ற எவ்வித நோக்கமின்றி பொது வழிபாட்டிற்கு பயன்படுத்தப்படும் பொது இடஙகளுக்கு, வரிவிலக்கு அளிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி குருநானக் தாம் கட்டிடமானது சீக்கியர்களின் வழிபாட்டுதலமான குருத்வாரா ஆகும். இவ்விடத்தில் இறைவழிப்பாட்டு நிகழ்வுகள் ஏதும் நடைபெறவில்லை என தெரிவித்து சென்னை மாநகராட்சியில் சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களித்து கடிதம் வழஙகப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி வரிவிலக்கு கோரியுள்ளனர் இதன்படி, இராமேஸ்வரம் நகராட்சிபகுதியில்உள்ளகுருநானக் தாம் கட்டிடத்தினைநேரடி ஆய்வு செய்யப்பட்டதில், அக்கட்டிடம் முழுமையாக ஆன்மீகப்பணிக்காக மட்டுமே செயல்பட்டுவருகிறது. இதில் எவ்வித கட்டணமோ, இலாபம் ஈட்டும் வகையில் எவ்வித வருமானமோ இல்லை என தெரியவருகிறது. ஏனவே குருநானக் தாம் கட்டிடத்திற்கு சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** : மேற்படி குருநானக் தாம் கட்டிடமானது இறைவழி பாட்டு பணிக்காக மட்டுமே பயன்படுத்தப்படும் கட்டிடம் என்பதாலும், மேலும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(a)ன் படி பொதுமக்கள் மற்ற எவ்வித நோக்கமின்றி பொதுவழிபாட்டிற்கு பயன்படுத்தப்படும் பொது இடமாதலாலும் மற்றும் பிரிவு 83(b)ன் படி வாடகை வசூல் செய்யப்படாத தர்மசத்திரஙகள் மற்றும் அவ்வாறு வாடகை வசூலிக்கப்படும் தொகையை தர்ம நோக்கஙகளுக்கு முன்றிலும் பயன்படுத்தப்படும் வாடகை வாஙகும் சத்திரஙகள் என்பதாலும் சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்** : **69**

**தீர்மானம்** : **அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்.05</u>** :

நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகளில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மறு சீரமைப்பு செய்திடவும் நகர்ப்புற நிலை மாற்றீடு செய்திடவும் மத்திய அரசால் அம்ரூத் சிட்டி(AMRUT City) – Atal Mission for Rejuvenation and Urban Transformation திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில்பயன் பெறநமதுமாநிலத்தில் இருந்து தேர்வு செய்த உள்ளாட்சி அமைப்புகளில் இராமேஸ்வரம் நகராட்சியும் இடம் பெற்றுள்ளது. சூமற்படி திட்டத்தின் கீழ் பசுமைப் பகுதி மற்றும் பூஙகாபணி செயல்படுத்த திட்ட கருத்துரு தயார் செய்து உரிய மன்ற அனுமதிபெற்று அனுப்ப TUFIDCO நிறுவனத்திடமிருந்து TUFIDCO/AMRUT/505/AM(M)/2016-17 நாள்: 27–07–2016 கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, கீழ்க்கண்ட விபரப்படியான மதிப்பீடு தயார் செய்து உரியமன்ற அனுமதி பெற்றுநிதி ஒதுக்கீடு

பெறTUFIDCO நிறுவனத்திடமிருந்து பிரேரனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடுதொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இராமேஸ்வரம் நகராட்சிவார்டு எண் 14க்குட்பட்ட காட்டுப் பிள்ளையார் கோயில் பகுதியில்உள்ள பி.ஏ.சி இராமசாமிராஜாநகர் பூஙகாவில் பசுமையுடன் கூடிய குழந்தைகளுக்கானபூஙகாஅமைத்தல். | ரூ.68.00 |
| 2 | சுற்றுலாத்துறைபூஙகா பகுதியில் பசுமையுடன் கூடிய குழந்தைகளுக்கான பூஙகாஅமைத்தல் | ரூ.49.00 |
| 3 | அய்யன் திருவள்ளுவர் பூஙகா பகுதியில் பசுமையுடன் கூடிய குழந்தைகளுக்கான பூஙகாஅமைத்தல் | ரூ.32.50 |
| | மொத்தம் | ரூ.150.00 |

சூமற்படி திட்டப்பணிகளுக்கு TUFIDCO நிறுவனம் கடிதம் எண் TUFIDCO/AMRUT/1956/AM(M)/2017, நாள்: 17–02–2017ன் படி அனுமதி அளித்துள்ளது. சூமற்படி அனுமதியின் படி மொத்த நிதி ஒதுக்கீட்டில் 30 விழுக்காடு தொகை ரூ.45.00 இலட்சத்தினை நகராட்சி பஙகளிப்பு தொகையாக பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும், இத்திட்டப்பணிகளுக்கு உரிய நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கவும் மன்றஅனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : அனுமதிக்கலாம்.
**தீர்மான எண்** : **70**
**தீர்மானம்** : **அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.06** : Resolved that the Rameswaram Municipality is authorizing the Commissioner to borrow the GOI and GOTN grant of Rs. 105.00 Lakh under the Atal Mission for Scheme for the following project as per the terms and conditions prescribed by TUFIDCO : Rs in Crore

| S.L. NO | Name of the project/Scheme No. | Approved cost | GOI Share (50%) | GOTN Share (20%) | ULB Share (30%) |
|---|---|---|---|---|---|
| 1. | Development of Green Spaces and parks at PAC Ramasamy Raja Nagar in Ward No-14 | 0.68 | 0.75 | 0.30 | 0.45 |
| 2. | Development of Green Spaces and parks at Tourism Park | 0.495 | | | |
| 3. | Development of Green Spaces and parks at AyyanThiruvalluvar Park | 0.325 | | | |

Resolved that the Rameswaram Municipalityagrees the terms and conditions mentioned in the sanction letter and agrees to execute the project as per the AMRUT guideline.

Further resolved that the council of Rameswaram Municipality will take necessary steps for implement/maintenance of the park through PPPP mode.

**அலுவலக குறிப்பு** :
**தீர்மான எண்** : **71**
**தீர்மானம்** : **அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.07** :

இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட தெருக்களில் உள்ள 1840 தெருமின் விளக்குகளுக்கு தேவையான மின் உதிரிபொருட்கள் தற்போது இருப்பில் குறைவாக உள்ளதாலும் எதிர்வரும் 27.07.2017 அன்று பேக்கரும்பு பகுதியில் நடைபெற இருக்கும் முன்னாள்குடியரசுத்தலைவர் மேதகு டாக்டர்.திரு. அப்துல்கலாம் அவர்களின் நினைவு மணி மண்டபம் திறப்புவிழாவிற்கு வருகைதரும் மத்திய மாநிலஅமைச்சர் பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் யாத்ரீகர்களின் பயன்பாட்டிற்கும் நகர்ப்புறங்களில் உள்ளஅனைத்து மின் விளக்குகளை எரியச் செய்யயும் வகையிலும் மேற்படி தெருவில் உரிய பொருட்கள் வாங்குவதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேசமதிப்பீட்டுத் தொகை ரூ.10,00,000/ க்கு செலவினம் மேற்கொள்ளவும், மேற்படிபணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதிபெற்று 24.07.17 அன்று குறுகியகால

ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்,

| | | |
|---|---|---|
| 1) | ஸ்ரீ சபரிஸ் டிரேடர்ஸ்<br>31, சொக்கொத்தன் தெரு,<br>மதுரை. | மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.06%குறைவு. |
| 2) | மஹாவீர் எலக்ட்ரோ கண்ட்ரோல்<br>மேலமாசி வீதி<br>மதுரை. | மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.39%குறைவு. |

**அலுவலக குறிப்பு** : மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.06%) கொடுத்துள்ள ஸ்ரீ சபரிஸ் டிரேடர்ஸ், மதுரை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். சூமற்படி பணிகள் அவசர அத்தியாவசியத்தைக் கருத்தில் கொண்டுமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதிபெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை ஏற்கலாம்.

**தீர்மான எண்** : **72**
**தீர்மானம்** : **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.08** :

இராமேஸ்வரம் நகராட்சி பேருந்து நிலைய வாகன நுழைவுகட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு உரியகாலம் 19–10–217ம் தேதியுடன் முடிவடைவதால் மேற்படி வசூல் செய்யும் உரிமத்திற்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்
**தீர்மான எண்** : **73**
**தீர்மானம்** : **அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.09** :

இராமேஸ்வரம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை–2016 அபராத கட்டணங்கள் நிர்ணயம் செய்த அறிவிக்கையினை இராமநாதபுரம் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய செலவினம் ரூ.43200/– செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்
**தீர்மான எண்** : **74**
**தீர்மானம்** : **அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.10</u>** :

இராமேஸ்வரம் நகராட்சியில் நடைபெற்றுவரும் திட்டப்பணிகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளை நாளிதழில் விளம்பரம் செய்தவகைக்கு கீழ்காணும் நாளிதழ் நிறுவனங்களுக்கு கட்டணத்தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | மதுரைமணி | 13824 |
| 2 | அக்கார்டுஏஜென்ஸி | 62970 |
| 3 | மாலைமுரசு | 22932 |
| 4 | தினத்தந்தி | 42784 |

**<u>அலுவலக குறிப்பு</u>** : மன்றம் அனுமதிக்கலாம்
**தீர்மான எண்** : **75**
**தீர்மானம்** : **அனுமதிக்கப்பட்டது.**

நகராட்சி அலுவலகம்,
நாள்: 27.09.2017

**ஆணையாளர்/தனி அலுவலர்,**
இராமேஸ்வரம் நகராட்சி.